IN THE COURT OF DISTRICT MUNSIF–CUM–JUDICIAL MAGISTRATE, THIRUPORUR.

OS No. 239/2023

**D.W.1**

Name : விஜயன், செயல் அலுவலர்
Father/Husband Name : கதிர்வேல்
Place :
Calling :
Age : 46

Date : 01–04–2026

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.04.2026.

சத்திய பிராமணம் செய்யப்பட்டார்.

**<u>முதல் விசாரணை –</u>**

1. நான் இவ்வழக்கின் பிரதிவாதி திருக்கோவில் செயல் அலுவலராக பணியாற்றி வருகிறேன். பிரமாண பத்திரம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். பிரமாண பத்திரத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். பிரமாண பத்திரத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்லி எனது தரப்பு வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது ஆகும்.

| | | |
|---|---|---|
| பி.சா.ஆ.1 | – | அ.வ.எண். 419/1996 தீர்ப்பாணை அடிப்படையில் சுவாதினம் ஒப்படைக்கப்பட்டதற்கான கட்டணை நிறைவேற்றுனரின் மேல்ஒப்ப சான்றிட்ட நகல் |

மேற்கண்ட ஆவணத்தில் தாவா சொத்தை கோவில் வசம் சுவாதினம் ஒப்படைத்தபோது அதில் இருந்த சாமான்கள் உள்ளிட்ட பொருட்களை வாதியின் தந்தை பெற்றுக்கொண்டதாக கையொப்பம் செய்துள்ளார். எனவே இத்தாவாவை தள்ளுபடி செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

2. இந்த வழக்கின் முழு விவரம் எனக்கு தெரியும். அ.வ.எண்.419/1996 வழக்கில் ஒருதலைபட்ச பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த விவரத்தை என்னுடைய வழக்கறிஞர் என்னிடம் சொல்லவில்லையா என்றால் அது எக்ஸ் பார்ட்டி ஆர்டர் தான். தாவா சொத்தின் புல எண். 50/2ஏ/1ஏ 0030 சதுர மீட்டர் விஸ்திரணம் கொண்டது. பி.சா.ஆ.1 ல் 2 சென்ட் என்று குறிப்பிட்டது என்றால் சரிதான். ஆனால் வாதி தனது வழக்குரையில் 300 ச.அ வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அ.வ.எண்.419/1996 வழக்கின் சொத்து விவரத்தில் நீள அகலம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. நீள அகலம் 17 X 10 ச.அ ஆகும்.

3. அந்த வழக்கில் அவ்வாறு அளவுகள் குறிப்பிடப்படவில்லை என்றாலும் நான் தற்போது சாட்சியம் அளிப்பது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்து கிராம நத்தம் என்றால்

சரிதான். கிராம நத்தம் என்பது இந்த கிராமத்தில் வசிக்கும் மக்களுக்கு கொடுக்கும் என்றால் அந்த இடம் திருக்கோவிலுக்கு சொந்தமானது. அது திருக்கோவிலின் பயன்பாட்டிற்கு தான் உள்ளது. அதில் 28 வாடகைதாரர்கள் உள்ளார்கள். அ.வ.எண். 419/1996 வழக்கில் தாவா சொத்து திருக்கோவிலுக்கு சொந்தமானது என்பதற்கு என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோம் என்றால் தெரியாது. அந்த ஆவணங்களை நான் பார்த்துள்ளேன் என்றால் பார்த்துள்ளேன். அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் கிராம நத்தம் என்பதால் கோவில் பெயரில் அந்த ஆவணம் இல்லை.

4. எங்கள் அலுவலகத்தில் கோபால் என்ன பணிசெய்தார் என்றால் அறங்காவல் நிர்வாகியாக இருந்தார். எத்தனை ஆண்டுகள் அந்த பணியில் இருந்தார் என்றால் 3 ஆண்டுகள் இருந்தார். அ.வ.எண். 419/1996 வழக்கில் இந்த வழக்கின் வாதியை என்ன என்று சொல்லி வழக்குதாக்கல் செய்தோம் என்றால் வாடகைதாரர் என்று குறிப்பிட்டு உள்ளோம். வாதி வாடகைதாரர் என்றால் அதற்கான இந்து சமய அறநிலைய துறை உத்தரவு ஏதேனும் கொடுத்து இருப்போம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தின் அடிப்படையில் தான் அ.வ.எண். 419/1996 வழக்கு கோவிலால் தாக்கல் செய்யப்பட்டு இருக்கும் என்றால் சரிதான்.

**வேண்டுக்கோளின் பேரில் வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

NILAVARASAN KASI

Digitally signed by NILAVARASAN KASI

District Munsif cum Judicial Magistrate,
Thiruporur.